### பரந்தூர் விமான நிலையத்திற்கு மாற்றாக வேறு இடம் குறித்து

# ஒன்றிய அரசிடம் த.வெ.க. அரசு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை!

## மாநிலங்களவையில் - பி.வில்சன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 23-

"பரந்தூர் விமான நிலையத்திற்கு மாற்றாக வேறு இடம் குறித்து ஒன்றிய அரசிடம் த.வெ.க. அரசு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை! என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் எழுப்பிய கேள்விக்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

சென்னை, பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள பசுமை வழி விமான நிலையத்தின் தற்போதைய நிலை, கட்டம் வாரியான முன்னேற்றம், மொத்த மதிப்பிடப்பட்ட திட்டச் செலவு, இது வரை ஒதுக்கப்பட்ட வரவுசெலவு நிதி மற்றும் அதை முடிப்பதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு ஆகிய விவரங்கள்; தருக.

**பதில்** : பரந்தூரில் சர்வதேச பசுமை வழி விமான நிலையத்தை அமைப்பதற்காக, தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDC) சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) 07.04.2025 அன்று 'கொள்கை அளயவிலான' (InPrinciple) ஒப்புதலை வழங்கியுள்ளது. செப்டம்பர் 2024இல் TIDCO சமர்ப்பித்த கொள்கை அளவிலான விண்ணப்பத்தின் படி, கட்டம்1 (Phase1)க் கான மதிப்பிடப்பட்ட திட்டச் செலவு தோராயமாக ரூ. 10,500 கோடி ஆகும்.

பசுமை வழி விமான நிலையக் கொள்கை, 2008 இன் படி, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு (R&R), நிதி திரட்டுதல், சுற்றுச்சூழல் அனுமதிகளைப் பெறுதல் உள்ளிட்ட பசுமைப் புல

விமான நிலையத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட விமான நிலைய உருவாக்குநர் அல்லது மாநில அரசைச் சேர்ந்ததாகும். விமான நிலையத் திட்டங்களை முடிப்பதற்கான காலக்கெடு நிலம் கையகப்படுத்துதல், கட்டாய அனுமதிகள் கிடைப்பது, நிதி நிருவாக முடிவு போன்ற பல காரணிகளைப் பொறுத்தது.

பசுமைப் வழி விமான நிலையத்திற்காக முன் மொழியப்பட்ட இடத்தை மாற்றுமாறு புதிய தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதா, ஆம் எனில், அத்தகைய கோரிக்கையின் தேதி வாரியான விவரங்கள் மற்றும் அதற்கு அரசின் பதில் என்ன.?

**பதில்** : இல்லை.

சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகளின் தற்போதைய நிலை, திட்டம் வாரியான பட்ஜெட் ஒதுக்கீடு, புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம், எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி மற்றும் பிற தொடர்புடைய விவரங்களைக் குறிப்பிடவும்?

தற்போதைய விமான நிலையங்களை மேம்படுத்துவது/ நவீனப்படுத்துவது என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முக்கிய விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் வருமாறு:

**சென்னை**: ரூ. 2,467 கோடி செலவில் இரண்டாம் கட்ட (PhaseII) நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம் முறையே தோராயமாக 81% மற்றும் 71% ஆக உள்ளது. மேலும், மழைநீர் வடிகால் சீரமைப்பு (ரூ. 209.01 கோடி), முனையம் 1ஐப் புதுப்பித் தல் (ரூ. 81.8 கோடி) மற்றும் ஏர்சைட் (Airside) உட்கட்டமைப்பு மேம்பாடு (ரூ. 480.06 கோடி) போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருச்சிராப்பள்ளி**: ரூ. 80.17 கோடி செலவில் புதிய ATC கோபுரம் மற்றும் தொழில் நுட்பக் கூடப் (Towercum Technical block) பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம் முறையே தோராயமாக 76% மற்றும் 49% ஆக உள்ளது.

**கோயம்புத்தூர்**: புதிதாகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் ரூ. 51.31 கோடி செலவில் சுற்றடைப்புச் சுவர் (Boundary Wall) கட்டுதல் மற்றும் ரூ. 13.71 கோடி செலவில் தற்போதுள்ள முனையக் கட்டிடத்தை (Terminal Building) விரி வாக்கம் செய்தல் மற்றும் மாற்றியமைத்தல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

என பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பரந்தூருக்கு மாற்றாக வேறு இடம் தேர்வு செய்யப்படும் என கூறி, பரந்தூர் விமான நிலைய பணிகள் தவெக அரசால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது மாற்று இடம் பற்றி ஒன்றிய அரசிடம் எந்த கோரிக்கையுமே இதுவரை தவெக அரசு வைக்கவில்லை என்ற தகவல் வெளிவந்துள்ளது.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!

### தமிழ்நாட்டில்

# மதச் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

நாடு முழுவதும் (குறிப்பாகத் தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதி உட்பட) மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக (PRASAD Pilgrimage Rejuvenation and Spiritual Augmentation Drive) திட்டத் தின் கீழ் அனுமதிக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப் பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் என்ன ? (தமிழ்நாட்டில் மாநிலம்/யூனியன் பிரதேசம் மற்றும் மாவட்டம் வாரியாக).

புனிதத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை, உள்ளூர் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றில் 'பிரசாத்' திட்டங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா?

தமிழ்நாட்டிலிருந்து (கோயில் நகரங்கள் மற்றும் பாரம்பரியப் புனிதத் தலங்கள் உட்பட) இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அல்லது நிதிக்காகக் காத்திருக்கும் முன்மொழிவுகளின் தற்போதைய நிலை மற்றும் அதற்கான தாமதத்திற்கான காரணங்கள் என்ன ?

தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் சமச்சீரான மதச் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், குறைவாக அறியப்பட்ட கூடுதல் புனிதத் தலங்களையும் உள்ளடக்கும் வகையில் 'பிரசாத்' திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### கடலூர் இந்தியா மருத்துவ சங்க கட்டிடத்தில்

# மாணவ - மாணவிகள் - பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## கடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் வழங்கினார்!

கடலூர், ஜூலை 23-

கடலூர் கோல்டன் சிட்டி லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கடலூர் இந்தியா மருத்துவ சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னாள் தலைவர் புருஷோத்தமன் தலைமை தாங்கினார். புதிய உறுப்பினராக டாக்டர் பிரவீன் ஐயப்பன், தலைவராக சேகர், செயலாளராக சுரேஷ், பொருளாளராக ரங்கநாதன் ஆகியோர் பதவியேற்றனர்.

புதிய நிர்வாக வாகிகளை உதவி மாவட்ட ஆளுநர் கமல் கிஷோர் ஜெயின் பணியில் அமர்த்தினார்.

விழாவில் முன்னாள் தி.மு.க. கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் டாக்டர் பிரவீன் ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவற்றோர்களுக்கு தையல் இயந்திரம், அரிசி, மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகை என 25 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

உதவி மாவட்ட ஆளுநர் சிவகாந்தன் புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்தார். விழாவில் ஜி.எல்.டி.ராஜாராமன், முன்னாள் செயலாளர் ரங்கநாதன், பொருளாளர் விஜயன், இயக்குனர்கள் ரவிச்சந்திரன், சக்திவேல், தங்கதுரை, ஜெயச்சந்திரன், சண்முகம், விஜயன், மனோகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர் விழாவை சக்தி பாபு தொகுத்து வழங்கினார்.

### காவிரி டெல்டா பகுதியில் உள்நாட்டு மீன் பிடிக்கும் தொழில்

# நீர்வரத்து குறைவினால், நசிந்து வருவது ஒன்றிய அரசுக்கு தெரியுமா?

## மக்களவையில் தஞ்சை ச.முரசொலி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை.23-

காவிரி டெல்டா பகுதியில் உள்நாட்டு மீன் பிடிக்கும் தொழில், நீர்வரத்து குறைவினால், நசிந்து வருவது ஒன்றிய அரசுக்கு தெரியுமா? அதை தடுக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதம மந்திரி மஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ் எத்தனை மீனவர் குடும்பங்கள் தமிழ் நாட்டில், குறிப்பாக தஞ்சாவூரில் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவர்களுக்கு என்ன உதவிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதில் அளித்துள்ள ஒன்றிய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜிவ் ரஞ்சன் சிங்,1480 உள்நாட்டு மீன் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ரூ 196.30 லட்சம் PMMSY திட்டத்தின் மூலம் 2021-22 மற்றும் 2023-24 ஆண்டுகளில் உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2024-25 மற்றும் 2025-26 ல் 9 லட்சம் மீன் குஞ்சுகள் 459 ஹெக்டர் நிலத்தில் (மீன் குட்டைகள் ) உற்பத்தி செய்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

### "விவசாய ஜனங்களை" மறந்து "ஜனநாயகனை" கொண்டாடும் ஆட்சியாளர்கள்!

# விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசை கண்டித்து திருவாரூரில் ஆர்ப்பாட்டம்!

திருவாரூர், ஜூலை23-

டெல்டா உள்ளிட்ட தமிழ்நாட்டின் விவசாயத்தை அழித்து, விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசை கண்டித்து திருவாரூர் மாவட்ட திமுக விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்களின் சார்பாக, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் 24.07.2026. வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மக்களை திசைதிருப்பும் நோக்கத்தில் பொய்யான வாக்குறுதிகளை தந்த தவெக அரசு , அந்த வாக்குறுதிகளின்படி விவசாயகளின் கூட்டுறவு கடனை முழுமையாக தள்ளுபடி செய்திடவேண்டும்.

ஆட்சியாளர்களின் அலட்சியத்தினால் குருவை சாகுபடி பொய்த்துப்போன நிலையில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15000 ரூபாய் நிவாரணம் வழங்கிடவேண்டும்.

விவசாயத்தையே நம்பி வாழும் விவசாய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மாதம் ரூபாய் 10000 வழங்கிடவேண்டும். கடுமையான வெய்யில் மற்றும் அனல் காற்றினால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி விவசாயி களுக்கு இழப்பீடு வழங்கிடவேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும், மேகதாதுவில் அணைக்கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசையும் அதனை கண்டுகொள்ளாத தவெக அரசை கண்டித்தும் நடைபெற இருக்கும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், விவசாயிகள் , விவசாய தொழிலாளர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்க வேண்டும் என திருவாரூர் மாவட்ட திமுக விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

### பெரம்பூர், முரசொலிமாறன் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள

# அறிவியல் தொழில்நுட்பப் பூங்கா (STEM Park)!

## சென்னை பள்ளி மாணவர்களுடன் மேயர் பிரியா பார்வையிட்டார்!

சென்னை,ஜூலை.23-

(21.07.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட, பெரம்பூர் நெடுஞ்சாலையில் உள்ள முரசொலி மாறன் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்பப் பூங்காவில் (STEM Park) உள்ள டிஜிட்டல் கோளரங்கம், அறிவியல் சார்ந்த உபகரணங்களை சென்னை பள்ளி மாணவர்களுடன் பார்வையிட்டார்.

இப்பூங்காவானது மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 5.75 கோடி மதிப்பீட்டில் 11,000 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் டிஜிட்டல் கோளரங்கம், நிறை மற்றும் மந்தநிலை (Mass and Inertia), வாட்டர் ஜெட் எரிபொருள், காந்தத்துடன் விளையாடுதல், சைன் அலை, சைக்ளோடிகல் பாதை (Cyclodical Path), நியூட்டனின் 3வது விதி, படிக அமைப்பு, கணித சிற்பம், டிஎன்ஏ மாதிரி, 3டி ஊசல் காசியன் தேற்றம், ஹைப்சோமீட்டர், ப்ரிஹோமேசியன் கியர் ரயில், சோலார் வாட்டர் ஹீட்டர், சூரிய சக்தியில் இயங்கும் ரேடியோ, இசைக் குழாய்கள், அலை இயக்கம், சந்திரா யன், மங்கள்யான் உள்ளிட்ட அறிவியல் சார்ந்த உபகரணங்களை சென்னை பள்ளி மாணவர்களுடன் மேயர் அவர்கள் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பூங்காவில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் மேயர் அவர்கள் மரக்கன்றினை நட்டார். பின்னர், பூங்காவினைப் பராமரித்திடவும், சென்னை பள்ளி மாணவர்களை தினசரி அறிவியல் தொழில்நுட்ப பூங்காவிற்கு கல்விச் சுற்றுலா போல் அழைத்து வருமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி துணை செயலாளர் ஆர்.ராஜன், வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் கோவை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு (DISHA) கமிட்டி கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியபனவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி பா.ராஜ்குமார், கோவை க.ஈஸ்வரசாமி பொள்ளாச்சி, மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் குட்டி (எ) ஆ.சுதாகர் வால்பாறை, கே.நித்தியானந்தன் பொள்ளாச்சி, கனிமொழி சந்தோஷ் கவுண்டம்பாளையம், மு.ஜெயக்குமார் உடுமலைப்பேட்டை, மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாவட்ட வன அலுவலர் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மேகதாதுவில் அணை கட்டினால்,

# டெல்டா விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும்!

## மக்களவையில் - டாக்டர் கலாநிதி வீராசாமி பேச்சு!

புதுடெல்லி, ஜூலை 23-

நாடாளுமன்ற விதி 377ன் கீழ் அவசர முக்கியத்துவம் ஆன பிரச்சினை என்ற அடிப்படையில், டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் மேகதாது அணைக்கட்டும் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்னும் அணை கட்ட வேண்டும் என்று கோரி வருகிறது. இதனால், காவிரி நீரைக் கொண்டு, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள. தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியில் வசிக்கும் விவாசியிகளிடையே பெரும் பதட்டம் நிலவுகிறது. ஏனெனில் இந்த அணைக் கட்டப்படுமானால், காவிரி ஆற்றுப் படுகையில் கீழ் மட்டத்தில் உள்ள தமிழகத்துக்கு நீர் வரத்து குறையும். தமிழக விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப சரியான காலத்தில், தண்ணீர் அணையிலிருந்து திறந்து விடப்பட்டால்தான் டெல்டா விவசாயிகளுக்கு விவசாயத்துக்குத் தேவையான நீர் கிடைக்கும்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி தமிழகம் உள்ளிட்ட காவிரி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களுக்கு நீர் வழங்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. மேலும் காவிரி ஆற்றுப் படுகையில், புதிதாக அணைக் கட்டும் திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப் படுவதாக இருந்தால், காவிரி நீரில் உரிமையுள்ள அனைத்து மாநிலங்களும் ஒப்புதல் கொடுத்தால் மட்டுமே, அத்தகைய திட்டத்தை மேற்கொள்ள இயலும்.

ஏற்கனவே காவிரி நதி நடுவர் மன்றம் காவிரிப் படுகை, நீர்வரத்து குறைவாக உள்ள ஆற்றுப்படுகை என அறிவித்துள்ளது. இந்நிலையில், காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக அணை கட்டப்படுமானால், தமிழகத்துக்கு வரும் நீர் தடுக்கப்பட்டு, டெல்டா விவசாயிகள் பெரும் பாதிப்பைச் சந்திக்கும் நிலை உருவாகும். தமிழ்நாடு அரசும், தமிழக சட்டமன்றமும் இத்திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன், ஒன்றிய அரசு, அணை கட்ட முயலும் கர்நாடக அரசின் முயற்சிகளைத் தடுக்கும்படி கோரியுள்ளன.

எனவே, தமிழக விவசாயிகளின் நலனைக் பாதுகாக்கும் வகையில், ஒன்றிய அரசு, கர்நாடக அரசின் அணைக்கட்டும் முயற்சியினைத் தடுத்து, காவிரி நடுவர் மன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி தமிழகத்துக்கு உரிய அளவு காவிரி நீரைப் பகிர்ந்து அளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு டாக்டர்.கலாநிதி வீராசாமி பேசினார்.